RECEIVED 1979-10-16 PERIODICALS DIVISION UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS

தரத்தில் நிகரற்ற
மான், முயல், விளக்கு,
வரிக்குதிரை,
செவன மார்க்
ஒடுகளுக்கு
மு. தா. பொன்னம்பலம்,
36, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 7493

பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

Sri Lanka Under No QB/8945/78
மலர் 21 புரட்டாசி 30 ஜுல்ஹஜ் 23 இதழ் 246
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 16-10-79

துரித மீட்டல் வகுப்புகள்
G. C. E. A/L
கலை, வர்த்தகம்
1980 ஏப்ரல் பரீட்சை
காலை முழு நேர வகுப்புகள்
கல்வி போதனா நிலையம்
34, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
சனி, ஞாயிறு முழுநேர
வகுப்புகள்
லோகநாதன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
ஆரம்பம் 24-10-79

# கல்விச்சேவை ஆணைக்குழு நியமிக்கப்பட்டது

## புதிய இடமாற்றத் திட்டம் விரைவில் அமுலுக்குவரும்

(கொழும்பு)

ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த சகல உத்தியோகத்தர்களினதும் நியமனங்கள் பதவி உயர்வுகள், இடமாற்றங்கள் சம்பந்தமாகக் கவனிக்கும் பொருட்டு மூன்று உறுப்பினர்களைக்கொண்ட கல்விச் சேவை ஆணைக்குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளது.

இந்த ஆணைக்குழுவின் தலைவராக திரு. வீரசிங்கமும் மற்றைய உறுப்பினர்களாக திரு டி எம் சுவாமிநாதன், திரு எஸ் எம் ஹமீட்டும் கடமையாற்றுவர். ஆணைக்குழுவின் காரியதரிசியாக திரு வி பி ரத்நாயக்கா பணிபுரிவார்.

கல்விச்சேவை ஆணைக்குழு நேற்று நியமிக்கப்பட்டதைத் தொடர்ந்து ஆணைக்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதி ஜே ஆர் ஜெயவர்த்தனாவைச் சந்தித்து கலந்துரையாடினர்.

ஆசிரியர்களினதும், கல்வி உத்தியோகத்தர்களினதும் மற்றும் கல்வித்துறையைச் சேர்ந்த ஊழியர்களினதும் பல்வேறு கஷ்டங்களை, [illegible] நியாயமான முறையில் இந்த ஆணைக்குழு தீர்த்துவைக்கும்.

புதிய இடமாற்றத் திட்டமொன்றும் விரைவில் இந்த ஆணைக்குழுவினால் அமைக்கப்பட்டு அமுலுக்கு வரவிருக்கிறது.

## "யாழ். பல்கலைக்கழகம் தேசிய வரம்புக்குட்பட்டது"

### புதிய மாணவர் மத்தியில் கல்பகே

(யாழ்ப்பாணம்)

"தமிழ் ஒரு தேசியமொழி. எனவே யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் தேசியவரம்புக்குட்பட்டது.

இவ்வாறு உயர்கல்வி அமைச்சின் செயலாளரும் பல்கலைக்கழக மானியக்குழுத் தலைவருமான டாக்டர் ஸ்டான்லி கல்பகே யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புதிய மாணவர்கள் மத்தியில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

டாக்டர் கல்பகே தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது: யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கு நான் விஜயம்செய்யும் ஒவ்வொருமுறையும் சந்தோஷமடைகிறேன். இங்கு உள்ள மாணவர்கள் மிகவும் அமைதியான முறையில் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

பல்கலைக்கழக மாணவர்களுக்கு கட்டுப்பாடு அவசியம். இப்பல்கலைக்கழகத்துக்கு என்னால் இயன்ற சகலவசதிகளையும் ஏற்படுத்தித்தருவேன். அடுத்த வருடத்திற்குள் புதிய கட்டிடங்களையும், சிறப்பான நூல்நிலையமொன்றையும் அமைப்பதற்குச் சகல ஏற்பாடுகளும் செய்யப்படும்.

(கெ-இ)

## "படுக்கைக்குப் போனபின் வெடிச்சத்தம் கேட்டது"

### வல்வை இளைஞர் மரணவிசாரணையில் இளம்பெண் சாட்சியம்

[புலோலி]

வல்வெட்டித்துறையில் கடந்த சனிக்கிழமை இரவு துப்பாக்கிச்சூட்டுக்குப் பலியான இளைஞரின் மரணம்சம்பந்தமான ஸ்தல மரணவிசாரணையை பருத்தித்துறை நீதிபதி திரு வே ஞானச்சந்திரன் நடாத்தினார்.

வல்வெட்டித்துறையைச் சேர்ந்த கிராமசேவகர் சோமசுந்தரம் என்பவரின் மகனான அமிர்தலிங்கம் (வயது 22) என்பவரே துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணமானவர் என்றும், இவரை "அபாகி" என்றும் அழைப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மரணவிசாரணையில் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம்நடைபெற்ற இடத்திற்கு அருகாமையில் வசித்துவரும் செல்வி இந்துமதி தங்கவடிவேல் சாட்சியமளிக்கையில் கூறியதாவது!

### வெடிச்சத்தங்கள் கேட்டன

சம்பவதினம் மாலை 5-30 மணியளவில் அம்மாவும்எனது தம்பி தங்கைமாரும் சனீஸ்வரன் கோவிலுக்குச் சென்றுவிட்டு இரவு ஏழேகால் மணியளவில் திரும்பிவந்தார்கள். எங்கள் தகப்பனார் கொழும்பு பிரதம தபாலகத்தொன்றில் தபாலதிபராகக் கடமையாற்றுகின்றார். வேறு ஒருவரும் எங்கள் வீட்டில் இல்லை. எனவே அம்மாவும் சகோதரர்களும் கோவிலால் வந்தவுடன் நாங்கள் கதவைப் பூட்டிவிட்டோம். இரவு சாப்பாட்டை முடித்துக்கொண்டு அம்மாவும் சகோதரர்களும் நித்திரைக்குச் சென்றுவிட்டார்கள். நானும் எனது தங்கையும் சாப்பாட்டை முடித்துக் கொண்டு கதைத்துக்கொண்டிருந்தோம். அப்போது மூன்று நாலு வெடிச்சத்தங்கள் கேட்டன. தீபாவளி அண்மித்து வருவதனால் யாரோ சீனவெடி கொளுத்துகிறார்கள் என்று நானும் தங்கையும் கதைத்தோம். பின்னர் நாங்கள் நித்திரையாகிவிட்டோம். இரவு 11 மணியளவில் அம்மா வந்து என்னை எழுப்பி கதவில் யாரோ தட்டுவதாகச் சொன்னார். நானும் எழுந்து வந்தபோது, கதவில் யாரோ தட்டுவது கேட்டது. யார் என்று கேட்டோம். அதற்கு "நாங்கள் வல்வெட்டித்துறைப் பொலிசார் கதவைத் திறவுங்கள்" என்று வெளியில் நின்றவர்கள் சொன்னார்கள். "இங்கு ஆண்கள் எவரும் இல்லை" என்று நாங்கள் கூறவே பயப்படாது கதவைத் திறக்குமாறு அவர்கள் கூறினார்கள்; கதவைத் திறந்தோம்.

வெளியே வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் இன்னும் சில பொலிசாரும் நின்றனர்; அப்போது அவர்கள் உங்கள் வீட்டிற்கு அண்மையில் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான ஒருவர் காணப்பட்டதாகவும், அது பற்றி உங்களுக்குத் தெரிந்த தகவலைக் கேட்டறிவதற்கே கதவில் தட்டியதாகவும் கூறினர். நாங்கள் எங்கே என்று கேட்டோம். அவரைத் தாங்கள் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றதாகவும், இடத்தைப் பார்க்க விரும்பினால் வெளியே வந்து பார்க்கலாம் என்றும் கூறினர். இதற்கிணங்க வெளியில் சென்று பார்த்தபோது அங்கில் உள்ள தண்ணீர்சவில் இரத்தக்கறைகளும் அருகில் கத்தியொன்றும் காணப்பட்டது. காயப்பட்டவரை நாம்

(6-ம் பக்கம் பார்க்க)

## கூட்டணி வெற்றி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய இயக்குநர்களாக கூட்டணி உறுப்பினர்கள் வெற்றிபெற்றுள்ளனர்.

நல்லூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் திரு க தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றபோது நெறியாளர் பதவிக்குப் போட்டியிட்ட ஐந்து தமிழர் விடுதலைக் கூட்டணி அங்கத்தவர்களும் வெற்றிபெற்றனர். புதிய இயக்குநர்கள் விபரம்: திருவாளர்கள் சி க அண்ட்றா, ந அருணாசலம், இ சோதிலிங்கம், ஏ பி இராஜையா, சோ தவலிங்கம்.

புதிய இயக்குநர்கள் தெரிவு நடைபெற்றதைத் தொடர்ந்து இயக்குநர்சபையின் புதிய தலைவராக திரு சி க அண்ட்றாவும், உபதலைவராக திரு ந அருணாசலமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

## நோபல் பரிசு

(ஸ்டொக்ஹோம்)

பொருளியல் துறைக்கான இவ்வருட நோபல்பரிசு அமெரிக்காவைச் சேர்ந்த இரண்டு பேராசிரியர்களுக்கும் பிரிட்டனில் வாழும் பாகிஸ்தான் பேராசிரியர் ஜனாப் அப்துல் சலாமுக்கும்கூட்டாக வழங்கப் பட்டுள்ளது.

நோபல் பரிசு பெறும்முதலாவது பாகிஸ்தான் விஞ்ஞானி, ஜனாப் அப்துல் சலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

## யாழ் நகரில் டணால் தங்கவேலு

(யாழ்ப்பாணம்)

பிரபல நகைச்சுவை நடிகர் டணால் கே. ஏ. தங்கவேலு குழுவினர் கொழும்பு, கிளிநொச்சி ஆகிய இடங்களில் நாடகங்கள் நடித்துவிட்டு இப்பொழுது யாழ்ப்பாணம் வந்துள்ளனர். இன்று யாழ் நகரில் அவரது நாடகம் நடைபெறவிருக்கிறது.

வீடியோ விற்பனைக்கு
புத்தம் புதிய வீடியோ கசற் றெக்கோடர்
புதிய கலர் ரெலிவிஷன். மூன்று புதிய படங்களுடன் விற்பனைக்கு உண்டு.
படங்கள்: (1) மீனவ நண்பன், (2) வாழ்க்கை அலைகள், (3) ஜெனரல் சக்கரவர்த்தி,
தொடர்புகொள்ள வேண்டிய விலாசம்:
விக்ரர் அன் சன்ஸ்,
100, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம். 3855

இன்று வீரசிங்கம் மண்டபத்தில் மாலை 6-30 மணி
தென்னிந்திய திரைப்பட நடிக ஜோடி
K. A. தங்கவேலு—M சரோஜாவுடன்
சென்னை மயன் தியேட்டர்ஸ் அளிக்கும்
'சப்தஸ்வரங்கள்'
டிக்கட்டுகள் மண்டபத்திலும்
மற்றும் விற்பனை நிலையங்களிலும்
பெற்றுக்கொள்ளலாம்.
நாளை "ராகமாலிகை"
3850

# வரி விளம்பரம்

### தேவை

[ யாழ்ப்பாணத்தில் பிரபல்யமான ஸ்தாபனமொன்றிற்கு ஆங்கிலத்தில் கணக்குகள் பதிவேடுகளில் எழுதுவதற்குக் கணக்குப் பதிவாளர் (Book-keeper) தேவை. முன் அனுபவம்/கணக்குப் பதிவில் இடைப்புப் பயிற்சி உடையோர் விரும்பத்தக்கது முடிவு திகதி: 20-10-79 விண்ணப்பிக்கவும் விளம்பர இல 3835. C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3835

யாழ். பஸ்நிலையத்திற்கு முன்பாக புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தையல்ஸ்தாபனமொன்றிற்கு [Weaving centre] தையல்வேலையில் அனுபவம் வாய்ந்த ஆண்-பெண் இருபாலாரும் உடன் தேவை. தொடர்பு முகவரி; லக்ஷ்மி ரெக்ஸ் காமென்ஸ், 202, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3856

### பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

பன்னாலை தெல்லிப்பழை பொன்னம்பலம் சிவபாதசுந்தரம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினது விடயத்தில்

மரணமெய்தியவர்

சிவபாதசுந்தரம் கைம்பெண் நிலாயதாட்சி பன்னாலை தெல்லிப்பழை

மனுதாரர்

எதிராக

இல: மரணசாதன நியாயாதிக்கம் இல: 41ரீச்

1. சிவபாதசுந்தரம் சோமசுந்தரம் 240, கழனுமாவத்தை இரசசிறியா.
2. அரியகுமார் துரைசிங்கமும
3. பெண் வசுமதி இருவரும் தெல்லிப்பழை மேற்கு
4. சிவபாதசுந்தரம் திவாகரன்
5. சிவபாதசுந்தரம் சுதாகரன்
6. சிவபாதசுந்தரம் இந்துமதி எல்லோரும் பன்னாலை தெல்லிப்பழை

எதிரெதிரிகள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது

அக்கறையுள்ள ஆள் எவருக்கு 1979ம் ஆண்டு ஐப்பசி மாதம் 19ம் திகதி நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுணதாக்கப்படலாகாது என்பதற்கு காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர் 1979ம் ஆண்டு ஐப்பசி மாதம் 11ம் திகதி நீதிமன்றக்கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்,
(ஒப்பம்)
பதிவாளர்.

தயாரித்தவர்
ம. சிதம்பரநாதன்,
(ஒப்பம்)
மனுதாரரின் சட்டத்தரணி
3845

### தேவை

டிரக்டர் பெட்டியுடன், தினசரி வேலைக்கு மூன்று மாதங்களுக்குத் தேவை உடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல; 3854, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3854

பனையில் நல்ல வர்க்க சாட்டுத் தடிகள் தேவை, 120 கம்பிக்கட்டை, 2 கப்புகள்-6 முழத்தில், 22 கப்புகள் - 10 முழத்தில், பாச்சுத்தடிகள் 12 முழத்தில்-104. பாரம்கொடுத்ததும் பணம் கிடைக்கும். ஆனந்தன் இக்லம், வல்வெட்டித்துறை- 3857

## மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தில்

மல்லாகத்தைச் சேர்ந்த காலம் சென்ற மயில்வாகனம் சதாசிவம் என்பவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தினதும் உடமைப் பொருளினதும் விடயத்தில்,

மயில்வாகனம் சதாசிவம்
மரணமெய்தியவர்

மரணசாதன நியாயாதிக்கம் இல. ரீ. 44

மயில்வாகனம் சதாசிவம் கைம்பெண் வேதநாயகி வேதவிக்லா மல்லாகம்.

நிர்மனுதாரர்

1. சதாசிவம் மான் சசிகலா
2. சதாசிவம் ரவிச்சந்திரன்
3. சதாசிவம் விமலச்சந்திரன் பராயமற்ற இவர்கள் மூவரினதும் பாதுகாவலனாக
4. அ. தேவேந்திரா எல்லோரும் வேதவிக்லா மல்லாகம்.

எதிர்மனுதாரர்கள்

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருபிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1979ம் ஆண்டு 11ம் மாதம் 9ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுச்சப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்

1979ம் ஆண்டு ஆடி மாதம் 25 திகதி.

நீதிமன்றக் கட்டளைப்படி

மூ. நல்லலிங்கம்
பதிவாளர்.

ஏ. பி. நடராஜன்
மனுதாரரின் சட்டத்தரணி.
3851

## மறைக்கல்விப் பரீட்சை

[சாவகச்சேரி]

யாழ்ப்பாண மறைமாவட்ட மறைக்கல்விப் பரீட்சை அடுத்த மாதம் நடைபெறுமென யாழ்ப்பாண மறைக்கல்வி நடுநிலையம் அறிவித்துள்ளது. இதற்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண மறைக்கல்வி நடுநிலைய இயக்குநர் வண பிதா ஜே. நீக்கலஸ் அடிகளார் கவனித்து வருகின்றார்

## வருடாந்த ஞான ஒடுக்கம்

[சாவகச்சேரி]

குருமாருக்கான ஞான ஒடுக்கம் பண்டத்தரிப்பு ஞான ஒடுக்க இல்லத்தில் இரண்டு பிரிவாக நடைபெறவிருக்கின்றது. முதலாவது ஞான ஒடுக்கம் நவம்பர் மாதம் 5ந் திகதி முதல் 10ம் திகதி வரை நடைபெறும். இரண்டாவது ஞான ஒடுக்கம் டிசம்பர் மாதம் 12ந் திகதி முதல் 17ந் திகதி வரை நடைபெறும் ஞான ஒடுக்க உரைகளை வண. பிதா இரைநெக்லி அடிகளார் வழங்குவார்கள். [இ]

## சிரமதானம்

[சாவகச்சேரி]

மிருசுவில் வடக்கு நவுண்டான் குளத்தை ஆழமாக்கிப் புனரமைப்புச்செய்யும் வேலைகளில் 40 சிரமதானத் தொண்டர்கள் ஈடுபட்டுள்ளனர் இச் சிரமதானப் பணி மிருசுவில் கிராம முன்னேற்றச் சங்கத் தலைவர் ஞா செ ஜோன் தலைமையில் நடைபெற்றுவருகின்றது

## குருத்தன்மை பொருந்திய ஆசிரியர்

குருத்தன்மை பொருந்திய, கடமையுணர்வுடைய ஒரு ஆசிரியராகத் திகழ்ந்து, தனது மாணவர்களின் முன்னேற்றம், மேம்பாடு ஆகியவற்றைக் கண்டு மகிழ்ந்தவர் அமரர் நல்லையா உபாத்தியாயர்.


மண்டைதீவைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், சரவணையை வதிவிடமாகக் கொண்டவருமான நல்லையா உபாத்தியாயர் என எல்லோராலும் அழைக்கப்படும் ஆசிரியர் சின்னத்தம்பி தியாகராசா 35 வருடங்களுக்கு மேல் மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலையில் ஆசிரியராகவும், தலைமையாசிரியராகவும் பணியாற்றியவர். இவரது ஆசிரிய சேவையை இக்கிராமத்தில் உள்ள எவரும் பாராட்டாமல் மதிக்காமல் இருந்ததில்லை. தீவுப்பகுதியிலேயே நல்லையா உபாத்தியாயர் என்றால் தெரியாதவர்கள் இருக்க முடியாது. அந்த அளவிற்கு அவர் இறுதிவரை பிரபல்யமாகத் திகழ்ந்திருந்தவர். மண்டைதீவுக் கிராமத்தில் 8ம் வகுப்புக்கு மேல் படித்து நல்ல நிலையில் இருக்கும் எவரும் இவரிடம் படித்தவர்களாகவே இருப்பர். இவரிடம் படித்த பலர், பலவித பதவிகளிலும், இன்னும் பலர் சமூக முன்னேற்றத் துறைகளிலும் திறமை மிக்கவர்களாகவே இன்றும் இருக்கின்றனர், இவை ஒன்றே அவரது சேவையின் அழியாத சின்னங்களாகும்.

அவர் தமது பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின்பும், அவரது சொல்லை மதித்து நடப்பவர்கள் அதிகமாக இருந்தனர். இதனால் பலவித சிக்கல்கள், தகராறுகள் கூட இலகுவாக சமாதானமாகத் தீர்த்துவைக்கத்தக்க நிலையிருந்தது. ஆகவே என்றும் மறக்கமுடியாத ஒரு குரு, அமரர் தியாகராசா ஆசிரியர். [illegible]

கடந்த மாதம் தனது ஓய்வூதிய விடயமாக அரசாங்கச் செயலகத்திற்குச் சென்றபோது செயலகத்திற்கு அண்மையில் மயக்கமடைந்த நல்லையா உபாத்தியாயர், இரண்டு வாரங்களுக்கு மேல் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில் அறிவற்ற நிலையில் இருந்து இம்மாதம் 5ந் திகதி வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார். சனிக்கிழமை மாலை இவரது பூதவுடல் சரவணையில் தகனம் செய்யப்பட்டது.

இறுதி யாத்திரையின்போது ஆயிரக்கணக்கானவர்கள் கலந்துகொண்டனர்.

சி. பாலசிங்கம்
செயலாளர்,
மண்டைதீவ மறுமலர்ச்சி இயக்கம்,



மின்கலைற புதிய தயாரிட புக்களில் ஒன்றாகிய மினி 'ரா சோட்' கண்மையில் விற்பனைக்கு வந்தபோது யாழ் ஐக்கிய வியாபாரச் சங்க நிர்வாக இயக்குநர் திரு எஸ் இலங்கை மின்கலைற அதிபர் திரு. க. கனகராசாவிடமிருந்து முதலாவதாகக் கொள்வனவுசெய்து விற்பனையை ஆரம்பித்து வைத்தபோது எடுத்தபடம்

## விஞ்ஞான, கணித, ஆங்கில ஆசிரியர்களுக்குப் பயிற்சி

(கொழும்பு)

விஞ்ஞான, கணித, ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சி, சகல ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிலும் நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

24 பயிற்சிக் கலாசாலைகளிலும் பயிற்சி பெறுவதற்காகக் கல்வியமைச்சு ஏற்கனவே 800 ஆசிரியர்களைத் தெரிவுசெய்துள்ளது.

இப்பாடங்களில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் தட்டுப்பாட்டின் காரணமாகவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கல்வியமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். [ச]

## அக்கராயனில் தச்சு தொழிற்பயிற்சிக் கல்லூரி

### தொண்டமான் அடிக்கல் நாட்டுவார்

[யாழ்ப்பாணம்]

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள அக்கராயன் குளத்தில் ஒன்றரை லட்சம் ரூபா செலவில் தச்சுத்தொழிற் பயிற்சிக் கல்லூரிக்கான புதியகட்டடம் ஒன்று அமைக்கப்படவுள்ளது

இம்மாதம் 28ம் திகதி இக் கட்டடத்திற்கான அடிக்கல்லை கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் நாட்டிவைப்பார்

இவ்வைபவத்தில் யாழ் மாவட்ட அமைச்சர் திரு யூ பீ விஜயக்கோன், யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், யாழ் அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி, யாழ். மாவட்ட புடவைக்கைத் தொழில் உதவி அத்தியட்சகர் திரு. விகவலிங்கம் மற்றும் உயர்அதிகாரிகளும் கலந்து கொள்வார்கள்.

கிளிநொச்சித் தொகுதிக்கு விஜயம் செய்யும் அமைச்சர் திரு. தொண்டமானுக்குப் வரவேற்பு அளிக்க ஏற்பாடு செய்யப்படுகிறது [செ]

## பருத்தித்துறைச் செய்திகள்

[புலோலி]

அரசாங்கத்தின் மாதிரிக் கிராமத் தெரிவுத்திட்டத்தின் கீழ பருத்தித்துறைத் தொகுதியில் உள்ள அல்வாய்த்திடல் கிராமம் இத்தொகுதியின் மாதிரிக்கிராமமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது

இம்மாதிரிக் கிராமத்தில் முதற்கட்டமாக சுயஉதவி வீடமைப்புத்திட்டத்தின் கீழ் ஐம்பது வீடுகள் அமைக்கப்படவுள்ளன.

ஃ ஃ ஃ

அரசாங்கத்தின் சுயவீடமைப்புத்திட்டத்தின்கீழ் பருத்தித்துறைத் தேர்தற் தொகுதியின் சுற்கோவளத்தில் அமைக்கப்படவுள்ள 50 வீடுகளையும் அமைத்துக்கொள்வதற்குத் தகுதியானவர்களை உதவி அரசாங்க அதிபர் தெரிவுசெய்துள்ளார்.

ஃ ஃ

அல்வாய் மேற்கு பூமகள் வாசிகசாலை வீதி 5,000 ரூபா செலவில் திருத்திப் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியினைக்கொண்டு வல்லிபுரக் குறிச்சி கிராம அபிவிருத்திச் சங்கம் இவ்வீதி புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டது.

ஃ ஃ ஃ

பருத்தித்துறையில் புதிதாகத் திறக்கப்பட்ட தேசிய சேமிப்பு வங்கிக்கிளையில் முதல் நாளன்று, 3 மணித்தியாலத்தில் 200 வாடிக்கையாளர்கள் சுமார் இரண்டு லட்சம் ரூபா பணத்தைச் சேமிப்புக்கணக்கினூடு சேமித்துள்ளனர்.

ஃ ஃ ஃ

வதிரி ஆலங்கட்டை வீதியையும் இருப்புமதவடி வீதியையும் இணைத்து புதிய வீதியொன்று அமைக்கப்பட்டு வருகிறது. பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்டத்தின்கீழ் உடுப்பிட்டி எம். பி திரு. த. இராசலிங்கம் இவ்வீதியமைப்புக்கென 10,000 ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.

ஃ ஃ ஃ

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் சுமார் 2 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டு வரும் நவீன இருமாடிக் கட்டிட விஞ்ஞான ஆய்வுகூடங்களின் கட்டிடவேலைகள் யாவும் பூர்த்தியாகிவருகின்றன.]

படிக்கத்தவறுதீர்கள்!

வீரசங்கிலியன்

யாழ்ப்பாண இராச்சியத்தைக்காக்க போர்ச்சுக்கேய பறங்கியரை போர்க்களத்திலே தோற்கடித்து பின்பு சகோதரனால் பறங்கியரிடம் காட்டிக்கொடுக்கப்பட்ட சங்கிலி மன்னனைப்பற்றி "தீப்பொறி" ஆசிரியர் திரு. அந்தனிசில் "ஈழநாடு" 21-10-79 வாரமலரில் எழுதும் தொடர் கட்டுரையை படிக்கத்தவறாதீர்கள்.

கூடுதல் பிரதிவேண்டும் ஏஜன்டுகள் உடன் தொடர்பு கொள்ளவும்.



தடுப்புக்காவல் சட்டம்

# தேர்தலுக்குமுன் வாபஸ்பெறப்பட வேண்டும்

## அரசுக்கு கருணாநிதி எச்சரிக்கை

சென்னை, அக் 15

தடுப்புக் காவல் அவசரசட்டத்தை எதிர்வரும் இடைக் காலத்தேர்தலுக்கு முன்னர் அரசு வாபஸ்பெறவேண்டும் இன்றேல் விபரீதமான விளைவுகளை அது எதிர்நோக்கவேண்டி ஏற்படும்

இவ்வாறு தமிழ்நாடு எதிர்க் கட்சித் தலைவரும் தி மு க தலைவருமான திரு. மு கருணாநிதி எச்சரிக்கை விடுத்துள்ளார்

தொழிலாளர் பேரணி ஒன்றில் பேசுகையிலேயே அவர் மேற்கண்ட எச்சரிக்கையை விடுத்தார்.

தொழிலாளர்களின் பிரச்சினைகளை அரசு முறையாகக் கவனிக்கவில்லை என்றும் திரு கருணாநிதி கண்டனம் தெரிவித்தார். (இ)

சர்ச்சைக்குரிய

## தடுப்புக்காவல் சட்டம் அமுலுக்கு வந்துள்ளது

புதுடில்லி, அக். 15

இந்திய அரசியலில் பெரும் சர்ச்சைக்குரியதும் திரு. சரண் சிங் சாபந்து அரசினால் தயாரிக்கப்பட்டதுமான கடத்தல் காரர்களையும், பதுக்கல்காரர்களையும் தடுப்புக் காவலில் வைக்கும் அவசர சட்டம் இன்று முதல் அமுலுக்கு வந்துள்ளது

இச்சட்டம் தொடர்பாக இன்று வானொலியில் உரை யாற்றிய வர்த்தக அமைச்சர் திரு ஹிதேந்திரதேசாய், ஏழை எளிய மக்களைச் சுரண்டி வாழும் பணம் படைத்தவர்களின் கொடுமைகளை அரசு பார்த்துக் கொண்டிருக்கமாட்டாது என்று கூறினார். (இ)

றொடீஷிய

## இராணுவத்தளபதி லண்டன் வந்தார்

லண்டன், அக் 15

லண்டனில் பிரிட்டிஷ் அரசுடன் பேச்சுநடத்திவரும் றொடீஷிய தேசபற்று முன்னணித் தலைவர்களைச் சந்திப்பதற்கு றொடீஷிய சிம்பாப்வே இராணுவத்தளபதி ஜெனரல் பீட்டர்வோல்ஸ் திடீரென லண்டன் வந்துள்ளார்.

## தமிழ்நாட்டில் அவசர சட்டம்

சென்னை, அக் 15

வர்த்தகர்கள் பரிசுத்திட்டம் நடாத்துவதைத் தடைசெய்யும் அவசர சட்டமொன்றை தமிழ்நாடு அரசு பிறப்பித்துள்ளது.

இச்சட்டத்தை மீறுவோருக்கு மூன்றுமாத கடுங்காவல் சிறைத்தண்டனை விதிக்கப்படும் எனவும் இவ்வாறான பரிசுத்திட்டங்களைத் தயாரிப்பதற்கு உடந்தையாக இருப்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இச்சட்டம் தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (கு)

## ஐ, நா. தினம்

[உடுப்பிட்டி]

உடுப்பிட்டிக் கல்வி வட்டாரப் பாடசாலைகள், ஐக்கிய நாடுகள் தினத்தை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 18ந் திகதி நடாத்தவுள்ளன.

## முழுப்புரட்சி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்திய மக்கள் ஜெ பி.யை இரண்டாவது காந்தியாகக் கருதுகின்றனர்.

தன்னுடைய முழுப் புரட்சியின் ஆரம்பக் கட்டத்திலே ஜெபி வெற்றிபெற்றுவிட்டார் சர்வாதிகாரம் ஒழிக்கப்பட்டு, ஜனநாயகம் புத்துயிரளிக்கப்பட்டுவிட்டது. இனி நடக்கவேண்டியது நிறைய இருக்கிறது ஜெபி தனக்குள் சாதனையைப் பற்றிக் கவலைப்படவில்லை முழுப் புரட்சியைப் பற்றியும், நாட்டைப் பற்றியுமே எண்ணிக்கொண்டிருக்கிறார்.

ஜெபி ஒரு சமயம் கூறினார்: "நான் இறக்கும்பொழுது, தேச பக்தனும் இறந்துவிடுகிறான்." நாடு இறக்கும் தறுவாயில் இருந்தது ஜெபியும் இறக்கும் தறுவாயில் இருந்தார் இப்பொழுது நாடு உயிர் பெற்று விட்டது ஜெபியும் உயிர் பெற்றுவிட்டார்.

அவர் தன்னுடைய முழுப் புரட்சியைத் தொடர்ந்து நடத்தி, இந்நாட்டில் ஒளிமயமான ஒரு சமுதாயத்தை நிச்சயம் அமைப்பார்.

நன்றி. தினமணிக்கதிர்

அமெரிக்க அதிபர் தேர்தலில்

# எண்ணெயை ஓர் ஆயுதமாக பிரயோகிக்கவேண்டும்

பெய்ரூட், அக் 15

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்தின்போது அரபு நாடுகள் எண்ணெயை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்த வேண்டும் என்று பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் அரசியல் பிரிவுத் தலைவர் ஜுஹுப்

## பாலஸ்தீன இயக்கம் அரபுநாடுகளுக்கு கோரிக்கை

பாரூக் கடோமி அரபு நாடுகளைக் கேட்டுள்ளார்

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் பாலஸ்தீன விடுதலை இயக்கம் தீவிர பிரசாரத்தில் ஈடுபடும் என்றும் அவர் கூறினார்.

அமெரிக்காவில் கறுப்பு இனத்தவர்கள் மட்டுமல்ல, அமெரிக்க காங்கிரஸ் உள்ள பலவெள்ளையர்கள் கூட தமக்கு நண்பர்களாக இருக்கின்றனர் என்றும் ஜுஹுப் கடோமி தெரிவித்தார். (இ)

## லண்டனில் ஜெ. பிக்கு அஞ்சலி

லண்டன், அக். 15

இந்திய சர்வோதயத் தலைவர் அமரர் ஜெயபிரகாஷ் நாராயணின் மறைவு குறித்து நேற்று லண்டனில் அஞ்சலிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இங்கிலாந்திலுள்ள இந்திய பதில் தூதவர் திரு. ஐ பி சிங் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் இந்திய வெளிநாட்டமைச்சர் திரு எஸ் எம் மிஸ்ரா கலந்துகொண்டு உரை நிகழ்த்தினார்.

லண்டனில் உள்ள இந்திய மாளிகையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கிரெட் தட்சரின் சார்பில் கன்சர்வேடிவ் கட்சி எம். பி. ஒருவர் உரை நிகழ்த்தினார். (இ)

1967-ல் கைப்பற்றிய அரபுமண்ணில்

## அராபியர்களின் காணிகளை இஸ்ரேல் சுவீகரிக்காது

ஜெருசலம், அக் 5

1967ம் ஆண்டு அரபு-இஸ்ரேல் போரில் கைப்பற்றப்பட்ட அரபு மண்ணில் அரபு மக்களுக்குச் சொந்தமான காணிகளை இஸ்ரேலிய அரசு சுவீகரிக்கமாட்டாது என்று இஸ்ரேலிய அமைச்சரவை முடிவுசெய்துள்ளது.

கைப்பற்றப்பட்ட பிரதேசத்தில் அராபியர்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளைச் சுவீகரித்து அக்காணிகளில் இஸ்ரேலிய குடியேற்றத்திட்டங்களை ஆரம்பிக்கவேண்டும் என்று அமைச்சர்கள் சிலர் அரசைக்கோரி வந்தனர் அமைச்சரவையில் இக்கோரிக்கைக்கு பலத்த எதிர்ப்பும் இருந்துவந்தது

இந்நிலை காரணமாக அரபு மக்களுக்குச் சொந்தமான காணிகளைச் சுவீகரிப்பதில்லை என்றும் இஸ்ரேலியர்களுக்குச் சொந்தமான காணிகளிலேயே 7 குடியேற்றத் திட்டங்களை அமைப்பதென்றும் இஸ்ரேல் முடிவுசெய்துள்ளது.

## பிரமபுத்திரா நதிசீற்றம் 25 பேர் பலி! 20 லட்சம்பேர்பாதிப்பு!!

புதுடில்லி, அக் 15

அஸாம் மாநிலத்தில் பிரமபுத்திரா நதி பெருக்கெடுத்ததனால் 25பேர் பலியாகினர் என்றும் 20 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. அஸாம் மாநிலத்தின் 10 மாவட்டங்களில் 7 மாவட்டங்களே பெரிதும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது.

எண்ணிலடங்கா கால்நடைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. [இ]

## வழக்குகள் வாபஸ்பெறப்படும்

சென்னை, அக். 15

நல்லெண்ணச் சூழ்நிலையை ஏற்படுத்தும் நோக்குடன் தமிழ்நாடு அரசு, தொழிலாளர்களுக்கு எதிரான வழக்குகளை வாபஸ்பெறுவதெனத் தீர்மானித்துள்ளது.

இதற்கான உத்தரவுகள் பொலிஸ் கமிஷனர் ஊடாக சகல பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பயங்கரக் குற்றமிழைத்தவர்களுக்கு எதிரான வழக்குகளை வாபஸ் பெறாமல் தொடர்ந்து விசாரணைசெய்யுமாறு பணிக்கப்பட்டுள்ளது. [இ]

## இந்தியாவில் கூட்டாட்சியே ஏற்படும் என்கிறார் அமைச்சர் பாலா

சென்னை, அக். 15

காவேரி ஆற்றங்கரைப் பகுதியில் எண்ணெய் ஆராய்ச்சி மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மத்திய பெற்றோலிய அமைச்சர் திரு. பாலா பழனூர் தெரிவித்தார்

திருச்சியில் நிருபர்கள் மத்தியில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்த அமைச்சர் தொடர்ந்து பேசுகையில், "ஆய்வு அறிக்கை பதினொரு மாதத்தில் தயாரிக்கப்பட்டுவிடும்" என்றார்.

அமைச்சர் திரு. பாலாபழனூர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"டீசல், மண்ணெண்ணை போன்ற எரிபொருட்கள் போதுமான அளவு கையிருப்பில் இருக்கின்றன. அதன் விநியோகத்தை சீராக நடத்த மாநில அரசுகள் முன்வர வேண்டும்.

எதிர்வரும் லோகசபைத் தேர்தலில் எந்தக்கட்சியும் தனித்து ஆட்சியமைக்கமுடியாது கூட்டாட்சியொன்றே ஏற்படும் என்றும் அவர் கூறினார். [கு-]

## கபாலி கட்சி மாறினார்

சென்னை அக் 15

தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு. டி. கே. கபாலி அ இ அ. தி. மு. கவில் சேர்ந்து கொண்டார்.

தி. மு. க. தலைவர் திரு மு கருணாநிதியிடம் தமது ராஜினாமாக் கடிதத்தைக் கையளித்துள்ள திரு கபாலி சென்னை மைலாப்பூர் சட்டமன்றத்தொகுதி உறுப்பினராவார். இவர் அ. தி மு கவில் சேர்ந்துகொண்டதால் தமிழ்நாடு சட்டசபையில் அ தி. மு. கவின் தொகை 126 ஆகவும் தி மு க வின் பலம் 47 ஆகவும் ஆகியுள்ளது. [கு]

## 'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :......................................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? .....................

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?..........................

(4) புதிய பிரதமர் யார்?........................

பெயர்:........................................

விலாசம்:........................................

........................................

........................................

........................ ........................
கையொப்பம் திகதி

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி: தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.

Till 18 th only
**SHANTHI** JAFFNA PHONE 7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30 p.m
JOE DON BAKER in
**"WALKING TALL"** Action Packed Color Movie

ரசிகர்கட்கு தித்திக்கும் தீபாவளி திரைவிருந்து!
19 முதல் ஜெய்... ஸ்ரீதேவி... **டாக்சிடிரைவர்** (கலர்)



**Ranee [Jaffna]** Daily at 10-30 a m, 2-30, 4-30, 7-00 & 9-30 p m
After its record breaking run in Colombo now comes to entertain you.
The most eagerly awaited Film.
The Best War Film to be released after a lapse of several years
**OPERATION DAY BREAK**
(One of the True great adventure story of our time)



**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப.2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர்-விஜயலக்ஷ்மி நடித்த
**வல்லவன் ஒருவன்**
(புதிய பிரதி)



**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி ஞாயிறு 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த்-ஜெயலலிதா
**வெண்ணிற ஆடை**



**லிடோ** யாழ். நகர்
போன்: 7693 தினசரி 4 காட்சிகள்
18-10-79வரை
சிவாஜி- சரோஜாதேவி நடித்த
**ஆலயமணி**


## புதிய நிர்வாகிகள்

(கோப்பாய்)

கோப்பாய் தெற்கு கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: த. சபாநாயகம், செயலாளர்: க. மாணிக்கவாசகர், பொருளாளர்: செ. குஞ்சிதபாதம், உப தலைவர்: மு. சுந்தரம், உப செயலாளர்: கா. தவராசா, கணக்காய்வாளர்: க. நித்தியானந்தன், உறுப்பினர்களாக 10 பேர் தெரிவாகினர். (கு)


**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6 30, 9-30,
சனி, ஞாயிறு 2-30
விஜயலலிதா
**ரிவோல்வர் ரீட்டா**



**RIO** Jaffna Phone: 7607
Daily 10-30 a m. 4-45, 7-00 & 9-30 p.m.
**One Chance In A Thousand**
(Spy-Thriller)



**வெல்லி** (மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சரோஜாதேவி
**ஆடிப்பெருக்கு**


# கடனை திருப்பிச்செலுத்தாத 80 விவசாயிகள் மீதுவழக்கு

(புலோலி)

வடமராட்சி பகுதியில் விவசாயக் கடனைப் பெற்றுத் திருப்பிச் செலுத்தாத 80 பேருக்கெதிராகப் பருத்தித்துறை இலங்கை வங்கிக்கிளை வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

புலோலி சமநலச் சேவை நிலையம் அம்பன் சமநலச் சேவை நிலையம் ஆகியவற்றினூடு 78—79ம் ஆண்டு கடன்களைப்பெற்று இதுவரை காலமும் செலுத்தப் பணத்தையோனும் கட்டாதவர்களுக்கெதிராகவே இவ்வழக்குகள் தாக்கல் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாகவும், வழக்குகளைத் தாக்கல்செய்வதற்குரிய அனுமதிபெறப்பட்டுள்ளதாகவும் பருத்தித்துறை இலங்கை வங்கிக் கிளையைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (கு)

## இன்றைய பலன்

புரட்டாதி மாதம் 30-ம் திகதி செவ்வாய்க்கிழமை
(16-10-1979)

**மேடம்:** கலைஞர்கள் போற்றப்படுவார்கள். வெளியூர்களில் இருந்து அழைப்புக் கிடைக்கலாம். பிறவழித் தனவரவுக்கும் இடமுண்டு. தருமகாரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**இடபம்:** புதிய எண்ணங்கள் மலரும், தொழில்துறையில் முன்னேற்றமுண்டு. பெரியவர்களுடன் தொடர்புகள் பெருகும். சிலருக்கு இடப்பெயர் மாற்றத்துக்கு இடமுண்டு. பொருளாதாரத் தன்மையும் கிடைக்கும்.

**மிதுனம்:** செலவுக்கு வேண்டிய பணம் தாராளமாகக் கிடைக்கும், நீண்ட நாள் சொந்தங்களுடன் இன்று மீண்டும் வந்து சேரலாம், பிறந்த இடத்தின் பெருமை நிலைநாட்டும், புத்திரர்களாலும் புகழ் கிடைக்கும்.

**கடகம்:** எண்ணங்கள் ஆயிரம் சிந்தனையிலே வந்து உதவும், ஏமாற்றம் தாக்கும், விந்தையான பேச்சு வேடிக்கை காட்டும்

**சிம்மம்:** துஷ்டர்கள் உறவால் துயரத்தில் மூழ்குவீர்கள், சிலர் வாழ்க்கையில் இடமாற்றம் பெறுவதற்கும் இடமேற்படலாம் கணவன் மனைவி உறவு காரசாரமாக இருக்கும், எக்காரணத்தைக் கொண்டும் திடீர் முடிவுக்கு வரவேண்டாம்.

**கன்னி:** தாம்பத்திய வாழ்வில் அன்பு தவழும், வாழ்க்கையில் தரமும் உயரும், சாதனைகள் வாழ்வில் கற்கண்டான நாள்.

**துலாம்:** கருத்துவேற்றுமைகள் கலகத்துக்கு இடமளிக்கும், புதிய இடத்திலிருந்து பணம் கிடைக்கலாம், மௌனமும் தெய்வ பக்தியும் நன்று

**விருச்சிகம்:** சகல துறைகளிலும் திருப்திகரமான சூழ்நிலை உருவாகும், வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக ஆதாயமுண்டு, மாணவர்களாயின் கல்வியில் முன்னேற்றம் தென்படும், இலருக்கு ஆராய்ச்சியில் ஆர்வம் பிறக்கலாம்.

**தனு:** மக்களால் மகிழ்ச்சி மனம் நிறைந்த வாழ்வு, புதுமையில் நாட்டம் புதும் பொலிவுமுண்டு, மகிழ்ச்சிகரமான தினம்.

**மகரம்:** முன்னேற்றப் பாதையில் தடைகள் பல தாக்கும், இருள் படர்ந்த சம்பவம் ஒன்று மீண்டும் நினைவுக்கு வந்து வேதனையைத் தரும், கடமையில் கவனம் செலுத்தவும்.

**கும்பம்:** உவகை தரும் சம்பவங்கள் இடம்பெறும், உறவினர்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள், குடும்பத்தவர்களின் வாழ்க்கையில் இனிமை தவழும்.

**மீனம்:** பொருள் கைவிட்டுப் போகும், மற்றவர்களிடத்தில் போக்கு கேட்க நேரிடும், சிநேகிதவழியால் சில தொல்லைகள் தோன்றக்கூடும், எதையும் தாங்கும் இதயம் வேண்டும்.

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## 2-ம் பரிசுபெற்ற கோஷ்டிகள்

(யாழ்ப்பாணம்)

"நொதேர்ன் ஸ்போட்ஸ்" சஞ்சிகையின் ஆதரவில் நடைபெற்ற மென்பந்து கிரிக்கட் சுற்றுப்போட்டியில் 16 வயதிற்கு மேற்பட்ட போட்டியில் 2வது இடத்தைப் பெற்ற நல்லூர் நொதேர்ன் ஸ்போட்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கு லயன்ஸ்கிளப் வெற்றிக்கிண்ணமும்-

16 வயதிற்குட்பட்டோரின் போட்டியில் 2வது இடத்தைப் பெற்ற நல்லூர் ஸ்டார் விளையாட்டுக்கழகத்திற்கு எஸ் ஆர் பீலிக்ஸ் வெற்றிக்கிண்ணமும் வழங்கப்பட்டன

அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த எம் முருகானந்தன் சிறந்த விளையாட்டு வீரருக்கான சிறந்த துடுப்பாடி வீரருக்கான பரிசையும் பெற்றார் அதே விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த கே யோகானந்தன் சிறந்த பந்துவீச்சாளருக்கானபரிசைப் பெற்றார். சிறந்த பந்து காப்பாளருக்கான பரிசு நல்லூர் நொதேர்ன் ஸ்போட்ஸ்விளையாட்டுக்கழகத்தைச் சேர்ந்த இ அம்பலவாணருக்குவழங்கப் பட்டது.

நியூவிக்டர்ஸ், நேஷனல் இன்ஸ்ரியூட், மிக்கவைற், மீராக்சாகிங், புரூமோட்டர்ஸ் எஞ்ஜினியரிங் கம்பனி லிமிட்டெட், நொதேர்ன் ஸ்போட்ஸ்கிளப், லயன்ஸ் கிளப், எஸ் ஆர் பீலிக்ஸ், ஜெயபாலசிங்கம் கம்பனி ஆகியோரும் இப்போட்டிக்கான பரிசில்களை அன்பளிப்புச் செய்தனர். (கு)


2-வது ஜனத்திரள் வாரம்
**மனோஹரா** A யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ சிவாஜி கணேசன் ★ சுஜாதா
சந்திரமோகன், கவிதா, தேங்காய் சீனிவாசன்
மனோரமா, சுகுமாரி
மற்றும் முன்னணி நடிகர்களும் நடித்திருக்கிறார்கள்.
முக்தா பிலிம்சாரின்
**அந்தமான்காதலி**
இசை: எம். எஸ். விஸ்வநாதன் (வண்ணப்படம்)
முக்கிய அறிவித்தல்:- தினசரி மாலை 6-00 மணிக்காட்சி முடிவடைந்தவுடன் பஸ்நிலையம் வரை செல்வதற்கு விசேட பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.



2-வது ஜனத்திரள் வாரம்
**ஸ்ரீதர்** (யாழ்நகர்)
காட்சிகள் முன்கூட்டியே ஆரம்பிக்கவேண்டியிருப்பதால் காட்சிநேரங்கள்குறிப்பிடமுடியாமைக்கு மன்னிக்கவும்.
நடிகர் திலகம் சிவாஜி கணேசன் நடிப்புச்செல்வி சுஜாதா
அறிமுகம் விஜயகுமார், சங்கீதா, நாகேஷ், சத்தியப்பிரியா,
ராமதாஸ், மனோரமா, சுந்தரராஜன்,
சுருளிராஜன், கச்சு இன்னும் பலர் நடித்திருக்கிறார்கள்.
இசை இளையராஜா வெள்ளிவிழாச் சித்திரம்
**தீபம்**
(வர்ணக் கலர்)



**ராஜா** யாழ். நகர்
இன்று மட்டும்
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - பத்மினி நடித்த
**அரசிளங்குமரி**
(புதிய பிரதி)
நாளைமுதல்: ஜீவனும்சம் (புதியபிரதி)



**REGAL** (Jaffna)
Daily at [illegible]
**FOR PETE'S SAKE**

# "குழந்தையின் முழுவளர்ச்சிக்குமுன் கருச்சிதைவு ஏற்பட்டுள்ளது"

## சுன்னாகம் வழக்கில் சட்டவைத்திய அதிகாரி

(யாழ்ப்பாணம்)

"கருச்சிதைவு ஏற்பட்டதென்பதற்கு அடையாளமாக காணப்பட்டன குழந்தையின் முழு வளர்ச்சிக்குமுன் கருச்சிதைவு நடந்திருக்கிறது"

சுன்னாகம் கருச்சிதைவு வழக்கில் சாட்சியமளித்த யாழ். சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மேற்கண்டவாறு கூறினார்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜனாப் எம். ஜமீல் முன்னிலையில் நேற்று ஆரம்பமானது.

இவ்வழக்கில் 1976ம் ஆண்டு ஆகஸ்ட் 9 தேதியளவில் சுன்னாகத்தில் கருச்சிதைவு செய்து இராஜேஸ்வரி என்ற இளம் பெண்ணின் மரணத்தை ஏற்படுத்தியதாக 1ம் எதிரி நவிறைகுடி மீதும், அதற்கு உடந்தையாக இருந்ததாக 2ம் எதிரி வி. செபஸ்தியாம்பிள்ளை மீதும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

1ம் எதிரிசார்பில் சட்டத்தரணி க. பரமசிவம்பிள்ளை, சட்டத்தரணி ஆர். ராஜஜாரியாவின் உதவியுடனும், 2-ம் எதிரி சார்பில் சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டத்தரணி சி. செல்வத்துரையின் அனுசரணையுடனும் ஆஜராகுகிறார்கள். அரசதரப்பில் சட்டத்தரணி ஜி. ஜெபக்குமார் வழக்கை நடத்தினார்.

சட்டவைத்திய அதிகாரி டாக்டர் எஸ். சுப்பிரமணியம் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது:

"இராஜேஸ்வரியின் பிரேத பரிசோதனையை 76 ஆகஸ்ட் 26ம் தேதிகாலை நடத்தினேன். அவருக்கு 25 வயது, சடலத்தை தந்தையும் தாயாரும் அடையாளம் காட்டினார்கள்.

### 49 மணி நேரத்துக்கு முன் இறந்திருக்கிறார்

பிரேதபரிசோதனைக்கு 48 மணித்தியாலத்திற்கு முன் இராஜேஸ்வரி இறந்திருக்கவேண்டும். பிரேதபரிசோதனை செய்த போது உடல் அழுகிய நிலை ஏற்பட்டுக்கொண்டிருந்தது.

நச்சுப்பையில் ஏற்பட்ட அழற்சியினால் உருவான நச்சுத்தன்மையினால் இராஜேஸ்வரி இறந்திருக்கலாம். கருச்சிதைவு குறையாகத்தான் நடந்திருக்கிறது. பூரணமாகக் கருச்சிதைவு நடந்தால், நஞ்சுக்கொடியும் வந்திருக்கவேண்டும். பரிசோதனையில் காயம் ஒன்றும் காணப்படவில்லை.

1ம் எதிரிசார்பில் ஆஜரான சட்டத்தரணி க. பரமசிவம்பிள்ளை, சட்டவைத்திய அதிகாரியைக் குறுக்குவிசாரணை செய்தார்.

சட்: முழுமையான குழந்தை 280 நாட்களில் பிறக்கும்?- ஆம்.

சட்: இதற்கிடையில் கர்ப்பச்சிதைவு ஏற்படுவதுண்டு?- ஆம்.

சட்: நோயினால் பலவீனம் ஏற்பட்டால் கருச்சிதைவு ஏற்படுவதுண்டு?- ஆம்.

சட்: நோய்க்கிருமி காரணமாகவும் கருச்சிதைவு ஏற்படும்?- ஏற்படலாம்.

சட்: சிலபெண்கள் கடலில் குளிப்பதினாலும் ஓடியாடித் திரிவதினாலும் கருச்சிதைவு ஏற்படும்? ஆம்.

சட்: பயங்கரமான அதிர்ச்சியினாலும் கருச்சிதைவு ஏற்படுவதுண்டு? ஆம்.

சட்: அநேகமாக கர்ப்பம் உண்டாகி 28 வாரங்களுக்குள் கருச்சிதைவு ஏற்படும்?- ஆம்.

3 அல்லது 4 மாதங்களில், அதாவது 12 முதல் 15 வாரங்களில்தான் அதிகமான கருச்சிதைவுகள் ஏற்படுவதுண்டு.

சட்: "சாபிள்ளைப்பெற்றும்" என்றும், வயிறழிவு என்றும் ஊரில் சாதாரணமாகக்கதைப்பார்கள்?- சாபிள்ளை என்றும் இறந்த பிள்ளையைக் குறிக்கும், வயிறழிவு என்றும் கருச்சிதைவைக்குறிக்கும்.

நீதிபதி: உடல் அழுகிய நிலையில் இருந்தபடியால் உள்காயம் காணப்படாத நிலை இருக்குமா?- சாதாரணமாக பலாத்காரமாக கருச்சிதைவு நடைபெற்றிருந்தால் அதன்மூலம் காயம் இருந்தால், அவை உடல்பு பழுதடைந்த நிலையிலும் ஏதாவது ஐயத்திற்கு உரிய இடமாகக் காணப்படும்.

2ம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) சட்டவைத்திய அதிகாரியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

சட்: எப்போது இந்தக் கருச்சிதைவு ஏற்பட்டதென் பதைக்கூறமுடியுமா?- மரணத்திற்கு 6 முதல் 8 மணித்தியாலத்திற்கு முன் நடந்திருக்கலாம்.

சட்: பல காரணங்களுக்காகத் திடீரெனக் கருச்சிதைவு ஏற்படலாம்?- ஆம்.

சட்: அப்படியானதில் இயற்கையாகவும் கருச்சிதைவு ஏற்படுவதுண்டு?- ஆம்.

சட்: இயற்கையான கருச்சிதைவும், தாயினுடைய நிலையாலும், கருவினுடைய நிலையாலும் ஏற்படலாம்?- ஆம்.

சட்: இந்த வழக்கில் இயற்கையான கருச்சிதைவு ஏற்பட்டிருக்கமாட்டாது என்று கூறமுடியாதா?- ஆம்.

சட்: அதேபோல் கருப்பையில் கரு அழிந்ததால் இயற்கைக் கருச்சிதைவு ஏற்பட்டிருக்குமென்பதையும் மறுக்கமுடியாது?- ஆம்.

சட்: ஆதலால் அப்படி நடந்திருக்கக்கூடும்?- ஆம்.

சட்: இராஜேஸ்வரியைப் பொறுத்தவரை கருச்சிதைவு நடக்கதை பற்றி திட்டவட்டமாகக் கூறமுடியாது?- ஆம்.

சட்: இவ்வழக்கில் கருச்சிதைவு இயற்கையான கருச்சிதைவாக இருக்கக்கூடும்?- ஆம்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும். [□]

## படுக்கைக்குப்.....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காணவில்லை" என்றார்.

### 8-30 மணியளவில் வெடிச்சத்தம் கேட்டது

செல்வி சந்திரலேகா வைகாபுரிநாதன் (வயது 20) சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

"நான் கன்னிக்கன்னி பெண்கள் பாடசாலையில் உயர் வகுப்பு படித்து பரீட்சை எழுதிவிட்டு பெறுபேற்றை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறேன். சம்பவதினம் நான் வானொலி கேட்டுவிட்டு சுமார் 8-30 மணியளவில் நித்திரைக்குப் போகும்போது மூன்று வெடிச்சத்தங்கள் கேட்டன. எனக்கு பயமாக இருந்தது "அடோ கள்ளன்" என்ற குரல் கேட்டதைத்தொடர்ந்து சப்பாத்து அணிந்தவர்கள் ஓடும் சத்தம்போல் கேட்டது. நான் திருடர்கள் என்று நினைத்து நித்திரைக்குச் சென்றுவிட்டேன். பின்னர் இரவு 11-10 மணியளவில் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும் சில பொலிசாரும் வந்து கதவில் தட்டினர். முன்னர் இவர்கள் யாரென்று தெரியவில்லை. பின்னர் அவர்கள் தங்களைக் கூறியதைபடுத்து பொலிசார் என்று அறிந்து கதவைத் திறந்தோம். பொலிசார் கேட்டதற்கு நான் இங்கு கூறியபடியே கூறினேன். வேறு ஒன்றும் தெரியாது" என்றார்.

### துப்பாக்கிகளும் நபர்களும் பாதுகாப்பில்

வல்வெட்டித்துறைப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. கணேசசாட்சியமளிக்கையில், சம்பவதினம் 9-30 மணியளவில் இராணுவ காப்டன் திரு. விபுல்புத்தேயூ வந்து, கோட்டியால் வல்வெட்டித்துறையில் துப்பாக்கிச்சூட்டிற்கு ஒருவர் இலக்கான சம்பவமொன்று நடைபெற்றதாகத் தெரிவித்ததைத் தொடர்ந்து, இதுபற்றி பொலிஸ் மேலிடத்துக்கும் தெரிவித்துடன் ஸ்தலத்துக்கு விரைந்து காயப்பட்டவரை மந்திகை அரசினர்வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றோம்.

இச்சம்பவம் தொடர்பாக மூன்று கைத்துப்பாக்கிகளையும் பொலிஸ்நிலையப்பொறுப்பதிகாரி நீதவான் முன்னிலையில் சமர்ப்பித்தார். இம்மூன்று கைத்துப்பாக்கிகளையும் யாழ். கச்சேரியில் பாதுகாப்பாக வைக்குமாறும், மூன்று சந்தேகநபர்களையும் யாழ். இணைப்பு அதிகாரியின் பாதுகாப்பில் வைக்குமாறும் கூறி, பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு மேல்விசாரணையை நீதவான் ஒத்தி வைத்தார்.

இறந்தவரின் நலனைக் கவனிக்கும்பொருட்டு சட்டத்தரணிகளான திரு. வெ. யோகேஸ்வரன், திரு. க. துரைரத்தினம், திரு. வ. வேலுப்பிள்ளையும், திரு. இ. து. இரத்தினசிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். வல்வெட்டித்துறைப் பொலிசார் தொடர்ந்து விசாரணை மேற்கொண்டுவருகின்றனர். மேல் விசாரணை இன்று நீதிமன்றத்தில் நடைபெறும்.


இந்த இன்பத் தீபாவளிக்கு

லிங்கம் சில்க் ஹவுஸ்

அளிக்கும்

மயூரா சிண்டிக்கேற் ஸ்தாபனத்தாரின்

MAYURA SYNDICATE

மனதுக்கிதமான கண்கவர் கலர்களில்

புத்தம்புது டிசைன்களில்

புதுமைகலந்த வண்ணங்களில்

அனைத்தும் உயர்ந்த ரகம்

- ★ ஜில் (Gil) பெல்ஸ்
- ★ கொட்டுரோய் (Corduroy) ஜீன்ஸ்
- ★ டெனிம் (Denim) ஜீன்ஸ்
- ★ டெனிம் (Denim) ஸ்கேட்
- ★ மயூரா (Mayura) பெல்ஸ்
- ★ மயூரா (Mayura) ஸ்கேட்
- ★ ராங்கிலர் (Wrangalr) சேட்
- ★ ஜில் (Gil) சிறுவர் பெல்ஸ்
- ★ பிளீட்டெட் (அச்சடித்த) ஸ்கேட் (இறக்குமதியானது) Pleated (Printed) skirt (imported)

வடபகுதி ஏக விநியோகஸ்தர்கள்

லிங்கம் சில்க் ஹவுஸ்

18, நவீன சந்தை, யாழ்ப்பாணம். ... தொலைபேசி: 7684


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி 68-ம் இலக்க அச்சகத்தில் 1979ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a Newspaper at the General Post Office Sri Lanka under] No: QD/39/8/78 The Eelanadu [F B No; 48 Telegram Eelanadu
T.Phone 881